**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 402/2018**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தமிழ்செல்வி | தொழில் | : பியூட்டிசியன் |
| கணவர் பெயர் | : சிவசங்கர் | சாதி | : |
| கிராமம் | : பனைமலைபேட்டை | சமயம் | : |
| வட்டம் | : | வயது | : 35 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி AWPS காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி. சக்தி அபிராமி W. Gr.1 – 2184 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1, 3 முதல் 7 எதிரிள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

**1.** நான் பனைமலைபேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். 1மஎதிரி சிவசங்கர் என் கணவர். 2மஎதிரி நாகம்மாள் எனது மாமியார். 3ம் எதிரி ரமணி எனது நாத்தனார். 4ம் எதிரி கவியரசு எனது மூத்தார். 5ம் எதிரி திலகா எனது ஓரக்குத்தி. 6ம் எதிரி மகேஷ்வரி எனது சின்ன மாமியார். 7ம் எதிரி அமுதா எனது நாத்தனார்.

2. கடந்த 21.06.2010ல் பாண்டிச்சேரியில் உள்ள கீர்த்தி மஹாலில் எனக்கும், 1ம் எதிரி சிவசங்கர் என்பவருக்கும் முறைப்படி திருமணம் நடந்தது. எங்கள் திருமணம் பெரியவர்கள் சம்மதத்துடன் நடந்தது. எங்கள் திருமணத்திற்கு எங்கள் கணவர் வீட்டில் இருந்து 17 சவரன் நகை கேட்டார்கள். எங்கள் வீட்டில் இருந்து 21 சவரன் நகை, மரக்கட்டில், பீரோ, 1 லட்சம் மதிப்புள்ள வீட்டு பொருட்கள், ஹீரோ ே ஹாண்டா இருசக்கர வாகனம் எங்கள் வீட்டில் கொடுத்தார்கள். 12.09.2011ந் தேதி பாண்டிச்சேரி ராஜுவ்காந்தி அரசு மருத்துவமணையில் எங்களுக்கு தீபக் என்ற ஆண் மகன் பிறந்ததார். அவருக்கு தற்போது 13 வயதாகிறது. குழந்தை பிறந்த நிலையில் இருந்து எனது குழந்தை தீபக் எங்கள் அம்மா வீடான பனைமலைபேட்டையில் தொடர்ச்சியாக 4 வருடங்களாக எங்கள் வீட்டில் தான் இருந்தார். பின்னர் எனது அப்பா முத்து என்பவர் சர்வேயராக பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டார். அப்பொழுது எனது

கணவர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அப்பொழுது எனது கணவர் சிவசங்கர் எனது அப்பாவிடம் எனது மனைவி, மகனை அழைத்து சென்று பாண்டிச்சேரியில் குடும்பம் நடத்துவேன் என்று எனது அப்பாவிடம் சொன்னார். உடனே எனது அப்பாவும் என்னையும், எனது குழந்தையும் பாண்டிச்சேரிக்கு அனுப்பிவைத்தார். அங்கு 1 வாரத்தில் எனது கணவர் என்னிடம் சொந்தமாக ஆட்டோ வேண்டும் என்று, அவுசிங்போர்டு வீடு வேண்டும் என்றும் மேலும் 5 சவரன் நகை வேண்டும் என்றும் கேமரா வேண்டும் என்றும் என்னிடம் என் கணவர் கேட்டார். அதற்கு எனது கணவரிடம் நீ வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருப்பதால் நான் எப்படி வாங்கிக்கொண்டு வருவேன் என்று சொன்னதற்கு திலகா, மகேஷ்வரி, கலையரசு, நாகம்மாள் ஆகியோர்கள் என்னை அடித்தார்கள். அப்பொழுது கேட்ட பொருட்கள் அனைத்தும் எங்களுக்கு தரவேண்டும் இல்லையென்றால் உன் குழந்தையை கடலில் தூக்கிபோட்டுவிடுவேன் என்று சொன்னார்கள். உடனே எனது கணவர் என்னை அவுசிங்போர்டிலேயே தனியாக விட்டுவிட்டு அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார். பின்னர், எனது கணவரை தேடிப்பார்த்தேன். பிறகு எனது மாமியார் வீட்டிற்கு இரவு நேரத்தில் சென்றேன். அப்பொழுது எனது மாமியார் நாகம்மாள் நீ எந்த காவல் நிலையத்திற்கு சென்றாலும் வேறு எங்கு சென்றாலும் எங்களை எதுவும் செய்ய முடியாது. நாங்கள் சொல்வதுதான் நம்புவார்கள் என்றும் என்னிடம் சொன்னார். நான் அதை கேட்டதற்கு நாகம்மாள், அமுதா, திலகா, ரமணி அனைவரும் ஒன்று சேர்ந்து என்னை அடித்தார்கள். பின்னர் எனது குழந்தையை அழைத்துக்கொண்டு பாண்டிச்சேரியில் உள்ள அவுசிங்போர்டுக்கு வந்துவிட்டடேன். பின்னர், 13.03.2016 ந் தேதி திலகா எனது வீட்டிற்கு வந்து எனது கணவரின் உடைகளை கேட்டார். நான் தரமுடியாது என்று சொன்னேன். அப்பொழுது வாக்குவாதம் ஆகி என்னை அடித்தார். அப்பொழுது நான் தனியாக இருந்ததானால் என்னுடன் வந்து இருந்தார். எனது கணவர் சிவசங்கர் எனக்கு இரவு நேரத்தில் போன் செய்து எவன் கூட படுத்துக்கொண்டு இருக்கிறாய் என்று கேட்டார். போய் செத்து தொலை என்று திட்டினார். அடுத்த நாள் எனது மகன் தீபக்கை பள்ளிக்கு அழைத்து செல்லும்போது ஆள் வைத்து என்னை மிரட்டினார்கள். பின்னர், உயிருக்கு பயந்து என் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர், இதுசம்மந்தமாக சமூக நல அலுவலகத்திலும் செஞ்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேன். தற்போது என்னுடைய நகைகள் அனைத்தும் மற்றும் வீட்டு பொருட்கள் இருசக்கர வாகனம் ஆகியன என் கணவர் வீட்டார்கள் கொடுக்காமல் அவர்களே வைத்துள்ளார்கள். 1 பீரோ, 1 கட்டில் மட்டுமே

என்னிடம் உள்ளது. என் கணவருக்கு எதிராக விவகாரத்து கேட்டு பாண்டிச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் எனக்கு ஆதரவாக விவகாரத்து வழங்கி 2017 ம் ஆண்டு நீதிமன்ற தீர்ப்பு வழங்கியது. 2018 ம் வருடம் எனக்கும் என் குழந்தைக்கும் பராமரிப்பு தொகை கேட்டு என் கணவருக்கு எதிராக பாண்டிச்சேரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். அந்த மனுவிலும் விசாரணைக்கு பிறகு எனக்கும் என் குழந்தைக்கும் மாதம் ரூ.10,000/- த்தை என் கணவர் சிவசங்கர் கொடுக்க வேண்டும் என்று 2019 ல் தீர்ப்பு வழங்கியது.

(2 வருடத்திற்கு முன்பாக இருசக்கர வாகனத்தில் சென்றபோது பின்னால் வந்த கார் மோதி ஏற்பட்ட விபத்தில் சாட்சியால் நீண்ட நேரம் நிற்க முடியாது என்று கூறியதாலும் ஸ்பைனல்கார்ட் அடிபட்டிருப்பதாலும் கூறிய நிலையில் சாட்சியை ஸ்டூலில் அமரவைத்து விசாரணை செய்யப்படுகிறது. )

என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் விசாரித்தனர்.

**( 1. 10.05.2017 தேதியிட்ட புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.